**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No.19/2024**
**நாள்.30.10.2025**
**வா.சா.1- திருமம்மாள்**
**த/பெ - தங்கவேல்**

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**
**(இந்த குறுக்குவிசாரணை 1ம் பிரதிவாதியால் Adopt செய்யப்படுகிறது)**

1. நான் தங்கவேலை திருமணம் செய்தேன் என்பதற்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், கோவிலில் தான் திருமணம் செய்தோம்.

2. எந்த கோவிலில் திருமணம் நடந்தது என்று நிரூபணவாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. என்னுடைய கணவர் வேடசந்தூர் தாலுகா, தென்னம்பட்டி கிராமம், கெச்சாணிபட்டியை சேர்ந்த பெருமாள் கவுடண்டர் என்றால் சரியல்ல. பெருமாள் கவுண்டருக்கு தான் 2ம் வாதி பிறந்தார் என்றாலும், தங்கவேலுக்கு பிறக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. 2ம் வாதி தங்கவேலுக்கு தான் பிறந்தார் என்பதற்கு அவருடைய பிறப்பு சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள பள்ளி மாற்றுச்சான்றிதழில் உண்மையான 2ம் வாதியின் தகப்பனாரை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நானும், 2ம் வாதியான என் மகளும் வேடசந்தூர் மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண். 217/2010 தாக்கல் செய்யப்பட்டு விசாரணையின் முடிவில் வாதியின் வருகையின்மை காரணமாக 14.08.2019ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மீண்டும் அந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கு எண்.217/2010 தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும்.

8. அசல் வழக்கு எண்.217/2010 பற்றிய விவரங்களை வழக்குரையில் குறிப்பிடாமல் மறைத்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே தங்கவேலின் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல.

10. பெருமாள்கவுண்டரின் மனைவியாகிய நான் தங்கவேலின் உண்மையான வாரிசுகளுக்கு எதிராக பொய்சங்கதிகளை கூறி தவறாக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. 1 முதல் 4 பிரதிவாதிகள் தங்கவேலுடன் 1ம் பிரதிவாதிக்கு திருமணமான காலத்தில் இருந்து குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களை நான் தான் வளர்த்தேன்.

12. தங்கவேல் பெயரில் சொத்துக்கள் உள்ளன என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

13. இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞருக்கு விவரங்கள் அனைத்தையும் சொன்னது நான் தான் என்றால் வாதிகளாகிய நாங்கள் தான் கூறினோம்.

14. என்னுடைய வழக்கு சட்டப்படி தடைசெய்யப்பட்ட வழக்கு என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**